செ.வெ.எண்: 258 நாள்: 27.3.2020

**புதுக்கோட்டை நகரில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் உழவர் சந்தையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு.**

---

புதுக்கோட்டை கே.கே.சி கல்லூரி எதிரில் உள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் உழவர் சந்தையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.3.2020) பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

பொதுமக்களை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து காத்திடும் வகையில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. யாரும் வீட்டை விட்டு வெளியில் வரவேண்டாம் என தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக உழவர்சந்தையில் அத்தியாவசிய தேவையான காய்கறி வாங்க வருபவர்களிடையே கூட்டம் ஏற்படாமல் தவிர்க்க இன்றையதினம் கே.கே.சி கல்லூரி எதிரில் உள்ள மைதானத்தில் தற்காலிகமாக கூடுதல் உழவர்சந்தை இயக்கப்படுவதை ஆய்வு செய்யப்பட்டது.

பொதுமக்கள் தினந்தோறும் காய்கறியை வாங்குவதற்கு வெளியில் வரவேண்டும் என்று இல்லாமல் குறைந்தபட்சம் ஒருவாரத்திற்குரிய காய்கறிகளை வாங்கி செல்லலாம். மிக முக்கியமாக 1 மீட்டர் இடைவெளியில் நின்று பொருட்களை பெற்று செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

மேலும் தீயணைப்பு வாகனங்களில் கிருமிநாசினிகளை நிரப்பி குடியிருப்பு வளாகங்கள் உள்ளிட்ட கட்டிடங்களில் கிருமிநாசினி மருந்து அடிக்கப்படும் பணியினையும் ஆய்வு செய்யப்பட்டது. இதுதவிர நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களின்

நலனுக்காக செயல்படுத்தப்படும் 144 தடை உத்தரவை மீறி யாரும் வெளியில் வரவேண்டாம் என தினந்தோறும் வீதிவீதியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வரும் பணியினையும் ஆய்வு செய்யப்பட்டது.

கொரோனா நோயில் இருந்து தங்களை காத்துக்கொள்ள ஒரே வழி வீட்டை விட்டு வெளியே வராமல் இருப்பதுதான் என்பதை பொதுமக்கள் நன்கு உணர்வதுடன், தங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கும் அலைபேசியில் பேசும் போது எடுத்துக்கூற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், வேளாண் வணிக இணை இயக்குநர் சிவகுமார், கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை சுப்புராஜ், தீயணைப்பு மீட்பு பணித்துறை நிலைய அலுவலர் ராஜராஜசோழன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**